**ஏப்ரல் – 22**

# TNPSC துளிகள்

- தமிழக அரசானது புவிசார் குறியீடுகள் (GI) பெறுவதற்கென்று விண்ணப்பிப்பதற்கான மானியத்தினை 25,000 ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- சென்னை கடற்கரை-செங்கல்பட்டு வழித்தடத்தில் தென்னிந்தியாவின் முதல் குளிர் சாதன மின்சாரத் தொடர்வண்டி சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசானது, இந்தியாவில் IBCA அமைப்பின் தலைமையகம் மற்றும் அதற்கான செயலகத்தினை நிறுவுவதற்காக சர்வதேசப் பெரும்பூனை இனங்கள் கூட்டணியுடன் (IBCA) ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மகாராஷ்டிரா மாநில வனவிலங்கு வாரியம் ஆனது, DPS ஃபிளமிங்கோ ஏரியை ஒரு வளங்காப்பகமாக அறிவிப்பதற்காக அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள், இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி முன்னெடுப்பின் கீழ் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான போர் வாகனங்களுக்கான தொழில்நுட்பங்களை இணைந்து உருவாக்குவதற்காக என தங்கள் முதல் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- நியூயார்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியினை நியூயார்க் நகரில் டாக்டர் B.R. அம்பேத்கர் தினமாக அறிவித்துள்ளார்.
- இந்தோனேசிய நாட்டின் கிழக்கு நுசா தெங்காரா என்ற மாகாணத்தில் அமைந்துள்ள லெவோடோபி எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- தேசிய நீர் மின்னாற்றல் கழக தனியார் நிறுவனம் (NHPC) ஆனது, இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள பர்பதி-II நீர்மின் நிலையத்தின் 2 ஆம் அலகின் (200 மெகாவாட்) சோதனை உற்பத்தியினை நிறைவு செய்துள்ளது.
- இந்திய அரசானது உள்நாட்டு உற்பத்தியாளர்களின் போட்டித் தன்மையை மிக நன்கு அதிகரிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டின் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் கொள்கையைத் திருத்தியமைத்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, உள்ளகப் பூஞ்சை நோய்களுக்கான மருந்துகள் மற்றும் கண்டறியும் கருவிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலான தனது முதல் அறிக்கையை வெளியிட்டுள்ளது என்பதோடு இது இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான மிகப் புதுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் (R&D) அவசரத் தேவையைக் குறிப்பிடுகிறது.
- அகாடமி விருதுகள் (ஆஸ்கார் விருதுகள்) 'சிறந்த சண்டைக் காட்சி வடிவமைப்பு' என்ற புதிய விருது வகையை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது என்பதோடு மேலும் இந்த விருதானது 2027 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ள 100வது அகாடமி விருதுகளில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தான முக்கிய ஒப்பந்தத்தின்படி, அமெரிக்கப் படைகளானது பனாமா கால்வாயை ஒட்டியுள்ள பகுதிகளில் அதன் படைகளை நிலை நிறுத்த அனுமதிக்கப்படவுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கலைஞர் கைவினைத் திட்டம் 2025

- தமிழக முதல்வர் 'கலைஞர் கைவினைத் திட்டம்' என்ற கைவினைஞர் மேம்பாட்டுத்

திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.

- இது மத்திய அரசின் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்திற்கான ஒரு மாற்றாக மாநில அரசின் ஒரு திட்டமாக செயல்படும்.
- இது மிகவும் உள்ளடக்கிய ஒரு வகையிலான, விரிவான, மேலும் சாதி அடிப்படையில் பாகுபாடு கொண்டிராத திட்டமாக இருக்கும்.
- இந்தத் திட்டமானது 25 தொழில்களை உள்ளடக்கியது என்பதோடு கூடுதலாக யார் வேண்டுமானாலும் தங்கள் விருப்பப்படி ஒரு தொழிலைத் தொடரலாம்.
- கலைஞர் கைவினைத் திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச வயது 35 வயது ஆகும்.
- இதில் அரசானது மானியத்துடன் சேர்த்து 50,000 முதல் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களை வழங்கும்.
- 2023 ஆம் ஆண்டில், மத்திய அளவில் மத்திய அரசானது விஸ்வகர்மா திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்தத் திட்டம் ஆனது, 18 தொழில்களை உள்ளடக்கியதாகவும், திறன் மேம்பாடு மற்றும் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களை வழங்குவதில் கவனம் செலுத்தும் என்றும் கூறப்படுகிறது.





## தமிழகத்தின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன்

- இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, தமிழகத்தின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 42,772.20 மெகாவாட் ஆகும்.
- இது முந்தைய ஆண்டின் 39,805.97 மெகாவாட் அளவில் இருந்து அதிகரித்து வருகிறது.
- இந்த ஆண்டு பதிவான மொத்தத் திறனில், நிலக்கரி மின் உற்பத்தித் திறனின் பங்கு 12,835.49 மெகாவாட் ஆகும்.
- இதில் சுமார் 4,320 மெகாவாட் என்பது மாநிலத் துறையிலிருந்தும், 5,490.17 மெகாவாட்

என்பது தனியார் துறையிலிருந்தும், 3,025.32 மெகாவாட் மத்திய துறையிலிருந்தும் பெறப் பட்டது.

- தமிழ்நாட்டின் பழுப்பு நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் உற்பத்தித் திறன் 1,959.16 மெகாவாட் ஆகும்.
- 1,709.16 மெகாவாட் மத்தியத் துறையிலிருந்தும், 250 மெகாவாட் தனியார் துறையில் இருந்தும் பெறப்பட்டது.
- எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறன் 1,027.18 மெகாவாட் ஆகும் என்பதோடு இதில் 524.08 மெகாவாட் மாநிலத் துறையிலிருந்தும் 503.10 மெகாவாட் தனியார் துறையிலிருந்தும் பெறப்படுகிறது.
- மத்திய மின்சார ஆணையத்தின் தரவுகளின்படி, 1,448 மெகாவாட் அணு மின் உற்பத்தி திறன் மத்திய துறையிலிருந்து பெறப்பட்டது.
- மார்ச் 31 ஆம் தேதி நிலவரப் படி, நமது மாநிலத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அடிப்படையிலான நிறுவப்பட்ட திறன் 25,290.67 மெகாவாட் ஆகும்.
- இதில், 11,739.91 மெகாவாட் காற்றாலை ஆற்றலிலிருந்தும், 10,153.58 மெகாவாட் சூரிய சக்தியிலிருந்தும், 2,178.20 மெகாவாட் நீர் மின் நிலையங்களிலிருந்தும் பெறப்பட்டது.
- 12,677.48 மெகாவாட் உற்பத்தித் திறனுடன், குஜராத் மாநிலம் தொடர்ந்து இரண்டாவது முறையாக காற்றாலை ஆற்றலில் முன்னிலை வகிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## இந்திய இரயில்வே துறையில் சூரிய மின்னாற்றல் நிறுவல்கள்

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, நாடு முழுவதும் உள்ள இரயில் நிலையங்கள் மற்றும் சேவைக் கட்டிடங்களில் சுமார் 2,249 சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவி உள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்திய இரயில்வே நிர்வாகமானது சுமார் 1,489 சூரிய மின்னாற்றல் உற்பத்தி அலகுகளை நிறுவியுள்ளது என்பதோடு இது முந்தைய ஐந்து

ஆண்டுகளில் நிறுவப்பட்ட 628 அலகுகளை விட 2.3 மடங்கு அதிகமாகும்.

- இந்த முன்னெடுப்பில் சுமார் 275 சூரிய மின்னாற்றல் நிறுவல்களுடன் அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் அதிகமான எண்ணிக்கையுடன் இராஜஸ்தான் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது.




## புதிய mAadhaar செயலி





- தற்போதுள்ள mAadhaar செயலியுடன் ஒப்பிடச் செய்யும்போது, புதிய செயலியானது புதுப்பிக்கப் பட்ட வடிவமைப்பைக் கொண்டுள்ளது.
- இதில் அச்சு நகலைப் பகிர வேண்டிய அவசியம் எதுவுமின்றி, ஆதார் தரவை கோரும் நிறுவனங்களுடன் மிகவும் பாதுகாப்பான முறையில் பகிர்வதற்கான முக அடையாள அங்கீகார அம்சமும் உள்ளது.

- தங்கும் விடுதிகள், விமான நிலையங்கள் மற்றும் ஆதார் அட்டையானது ஒரு ஆவண அடையாளச் சான்றாகப் பயன்படுத்தப்படும் பிற இடங்களில், ஆதார் அட்டை அல்லது அதன் புகைப்பட நகல்களைப் பகிர்வதைத் தவிர்க்கப் பயனர்களுக்கு வேண்டி இது வாய்ப்பளிக்கும்.

## தேசிய முக்கியக் கனிமத் திட்டம் 2025

- இந்திய அரசானது, முக்கியக் கனிமத் துறையில் தன்னிறைவிற்கான ஒரு வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்காக என்று 2025 ஆம் ஆண்டில் தேசிய முக்கியக் கனிம திட்டத்தினை (NCMM) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கனிமங்கள் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் இந்தியாவின் முக்கியமான கனிம விநியோகச் சங்கிலியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) ஆனது 2024-25 ஆம் ஆண்டு முதல் 2030-31 ஆம் ஆண்டு வரை 1,200 ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளும் பணியை மேற்கொண்டுள்ளது.




## ANPR-FASTag அமைப்பு


- தற்போதைக்குச் செயற்கைக்கோள் அடிப்படையிலான சுங்க வசூல் அமைப்பினைத் தொடங்குவதற்கு எந்தத் திட்டமும் இல்லை என்று அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.
- இருப்பினும், புதிய ANPR-FASTag அடிப்படையிலான தடையற்றச் சுங்க வசூல் அமைப்பு ஆனது இந்தியா முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சுங்கச்சாவடிகளில் அறிமுகப் படுத்தப் படும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.
- இது பின்வரும் இரண்டு தொழில்நுட்பங்களின் கலப்பினைப் பயன்படுத்தும்:
    - ANPR (வாகன எண் தகடுகளின் தானியங்கு அங்கீகாரம்): வாகன எண் தகடுகளைப்

அங்கீகரிப்பதற்கு ஒளிப்படக் கருவிகளைப் பயன்படுத்துகிறது.


- FASTag: சுங்கச்சாவடி கட்டணங்களைக் கணக்கில் இருந்து தானாக எடுப்பதற்கு RFID குறியீட்டினைப் பயன்படுத்துகிறது.

❖ இந்த அமைப்பின் மூலம், வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் நிறுத்த வேண்டியதில்லை.

❖ இந்தக் கட்டமைப்பின் மூலம் சுங்கக் கட்டணங்கள் தானாகவே வசூலிக்கப்படும்.




## இந்தியாவிற்கு ஷின்கன்சென் இரயில்கள் பரிசளிப்பு





❖ ஜப்பான் அரசானது, அதன் முக்கிய நுட்பமான இரண்டு ஷின்கன்சென் இரயில்களை சோதனை மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக இந்தியாவிற்குப் பரிசளிக்க உள்ளது.

- தற்போது கட்டுமானத்தில் உள்ள மும்பை-அகமதாபாத் அதிவிரைவு இரயில் வழித் தடத்தில் சோதனை ஓட்டங்களை மேற்கொள்வதற்காக வேண்டி இந்த இரயில்கள் பயன்படுத்தப் பட உள்ளன.
- மும்பை-அகமதாபாத் அதிவிரைவு இரயில் வழித்தடமானது, நிறைவு செய்யப் பட்ட உடன், அதிகபட்சமாக மணிக்கு 320 கிலோ மீட்டர் வேகத்திலான இந்தியாவின் முதல் அதிவிரைவு இரயில் வழித்தடமாக இருக்கும்.
- இந்த அதிவிரைவு இரயில் வழித்தடமானது புல்லட் ரயில் என்றும் அழைக்கப்படும்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மருந்தியல் துறையின் ஏற்றுமதி



MAPPING THE TREND

Pharma exports (in $ bn)

| Region | April-Feb FY25 | % chg Y-o-Y | % share in total exports |
|---|---|---|---|
| NAFTA | 9.8 | 14.06 | 36.6 |
| EUROPE | 5.1 | 2.72 | 19.35 |
| AFRICA | 3.5 | -1.74 | 13.16 |
| LAC | 1.8 | 10.41 | 6.77 |
| TOTAL | 26,785.69 | 6.95 | |


- இந்திய மருந்தியல் துறையின் ஏற்றுமதியானது 2025 ஆம் நிதியாண்டில் சுமார் 30,467. 32 மில்லியன் டாலரை எட்டியதோடு இது 2024 ஆம் நிதியாண்டில் பதிவான 27,851.70 மில்லியன் டாலரை விட 9 சதவீதத்திற்கும் மேல் அதிகமாகும்.
- மார்ச் மாதத்தில் பதிவான மருந்தியல் துறையின் ஏற்றுமதியானது ஆண்டிற்கு 31.21 சதவீதம் அதிகரித்து 3681.51 மில்லியன் டாலராக (2805.71 மில்லியன் டாலர்) இருந்தது.
- 2025 ஆம் நிதியாண்டில் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி (மதிப்பு அடிப்படையில்) 14.29 சதவீதம் அதிகரித்து 8,953.37 மில்லியன் டாலராக இருந்தது.
- கடந்த நிதியாண்டில் இந்தியாவின் மருந்து ஏற்றுமதியில் முன்னணியில் இருந்த பிற நாடுகள் ஐக்கியப் பேரரசு, பிரேசில், பிரான்சு மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியன ஆகும்.

## 2024/25 ஆம் ஆண்டில் இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதார நாடு

- 2024-25 ஆம் ஆண்டில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக 131.84 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்துடன் அமெரிக்கா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- இதே காலக் கட்டத்தில் சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது,

99.2 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது.

- கடந்த நிதியாண்டில், சீனாவிற்கான இந்தியாவின் ஏற்றுமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 16.66 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 14.5 சதவீதம் குறைந்து 14.25 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- இருப்பினும், 2023-24 ஆம் ஆண்டில் 101.73 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இறக்குமதிகள் ஆனது, 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 11.52 சதவீதம் அதிகரித்து 113.45 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்தன.
- 2023-24 ஆம் ஆண்டில் பதிவான 118.4 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் ஒப்பிடும் போது, 2024-25 ஆம் ஆண்டில் 127.7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்துடன் சீனாவானது இந்தியாவின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்குதார நாடாகத் தொடர்ந்தது.
- 2013-14 முதல் 2017-18 ஆம் ஆண்டு வரையில் மற்றும் 2020-21 ஆம் ஆண்டிலும் சீனா இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதார நாடாக இருந்தது.
- சீனாவுக்கு முன்னதாக, ஐக்கிய அரபு அமீரகமானது நாட்டின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதார நாடாக திகழ்ந்து வருகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சோயுஸ் MS-26 விண்கலம்


- ஒலெக் ஓவ்சினின், இவான் வாக்னர் மற்றும் டொனால்ட் பெட்டிட் ஆகிய நபர்களை உள்ளடக்கிய கொண்ட சோயுஸ் MS-26 விண்கலத்தின் குழுவினர் மேற்கொண்ட ஒரு விண்வெளிப் பயணம் முடிந்து அவர்கள் கஜகஸ்தானின் ஜெஸ்காஸ்கன் பகுதியில் தரையிறங்கினர்.
- அவர்கள் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில்

விண்வெளிச் சுற்றுப்பாதையில் பணியாற்றினர்.


❖ இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த 80 ஆம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் இது விண்ணில் ஏவப்பட்டது.

❖ ஒரு சோயுஸ் விண்கலத்தில் மூன்று விண்வெளி வீரர்கள் பயணிக்க முடியும்.

❖ செயற்கைக் கோள்கள் மற்றும் மனிதர்கள் செல்லும் விண்கலம் உட்பட மொத்தம் 1680க்கும் மேற்பட்ட வெற்றிகரமான ஏவுதல்களை இது மேற்கொண்டுள்ளது.




## இடைநிலை-நிறை கொண்ட கருந்துளை




❖ இந்திய வானியலாளர்கள் ஓர் அரிதான இடைநிலை நிறை கொண்ட கருந்துளையின் (IMBH) இயல்புகளைக் கண்டறிந்து அளவிட்டுள்ளனர்.

❖ இது சுமார் 4.3 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள குறைவான ஒளிர்திறன் அண்டத்தில் அமைந்துள்ளது.

❖ NGC 4395 அண்டத்தில் அமைந்துள்ள இந்தக் கருந்துளையானது, சூரியனின் நிறையை

விட சுமார் 22,000 மடங்கு எடையுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

❖ இந்தக் கண்டுபிடிப்பானது இந்தியாவின் மிகப்பெரிய ஒரு ஒளியியல் தொலைநோக்கி ஆன சுமார் 3.6 மீட்டர் தேவஸ்தல் ஒளியியல் தொலைநோக்கியை (DOT) பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## கிராம அளவிலான தொல்பொருள் கணக்கெடுப்பு




❖ கர்நாடகா மாநில அரசானது இந்திய நாட்டிலேயே முதல் முறையாக பழங்காலப் பொருட்களை ஆவணப்படுத்துவதற்காக என்று கிராம அளவிலான கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளது.

❖ நிறைவடைந்ததும், இது பழங்காலப் பொருட்களின் விரிவான பட்டியலை வழங்கும்.

❖ இங்கு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்ட சுமார் 600க்கும் மேற்பட்டவற்றுடன் மேலும் கூடுதலாக மாநில அரசினால் பாதுகாக்கப்பட்ட 800க்கும் மேற்பட்ட நினைவுச் சின்னங்கள் இருந்தன.

## கேரளா – இயங்கலை வழி நிரந்தர லோக் அதாலத் சேவைகள்

❖ நிரந்தர லோக் அதாலத்களுக்கான இயங்கலை வழி மனு தாக்கல் மற்றும் விசாரணை வசதிகளை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.

❖ இது கேரள மாநிலச் சட்ட சேவைகள் ஆணையத்தின் (KELSA) முன்னெடுப்பாகும்.

❖ விண்ணப்பதாரர்கள் இந்த மாநிலத்தின் எந்த பகுதியிலிருந்தும் தங்கள் வழக்குகளை இயங்கலையில் தாக்கல் செய்ய இது உதவும் என்பதனால் இது நேரம், வளங்கள் மற்றும் முயற்சியை மிச்சப்படுத்த உதவும்.

❖ லோக் அதாலத் என்பது சர்ச்சைகளைச் சுமூகமாக தீர்க்கும் ஒரு மாற்றுத் தகராறு தீர்வு தளமாகும்.

❖ தற்போது, திருவனந்தபுரம், எர்ணாகுளம் மற்றும் கோழிக்கோடு ஆகிய இடங்களில் நிரந்தர லோக் அதாலத்கள் நடத்தப் படுகின்றன.

❖ இயற்கைப் பேரழிவுகளால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித் திட்டமான ஆதி ஜீவனம் எனும் திட்டத்தினையும் கேரள மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- சமயம் எனும் மற்றொரு திட்டம் காவல் நிலைய வழக்குகளுக்கு முந்தைய நிலையில் உள்ள உரிமையியல், பகுதியளவு உரிமையியல் சார்ந்த மற்றும் மிகவும் சிக்கலான குற்றவியல் விவகாரங்களை அமைதியான மற்றும் மிகவும் இணக்கமான முறையில் தீர்ப்பதற்கானதாகும்.
- திருமணம் மற்றும் குடும்ப தகராறுகளைத் தீர்ப்பதற்காக வேண்டிய ஒரு ஆலோசனை வழிமுறையும் இதில் தொடங்கப் பட்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2025 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்கள்




- டைம் இதழ் ஆனது, அதன் 2025 ஆம் ஆண்டிற்கான மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இப்பட்டியலில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், எலான் மஸ்க் மற்றும் வங்காள தேசத்தின் முகமது யூனுஸ் போன்றவர்கள் இடம்பெற்றுள்ளனர்.
- சமீபத்திய ஆண்டுகளில் முதல் முறையாக, இந்த ஆண்டில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களின் பட்டியலில் ஓர் இந்தியக் குடிமகன் கூட இடம்பெறவில்லை.

- வெர்டெக்ஸ் பார்மாசூட்டிகல்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரேஷ்மா கேவல்ரமணி இப்பட்டியலில் இடம் பெற்று உள்ள முதல் 100 பேரில் ஒருவராக இடம் பெற்றுள்ளார்.

## WEF உலகின் இளம் தலைவர்கள் 2025

- மத்திய அமைச்சரவையின் இளம் அமைச்சரான இராம் மோகன் நாயுடு, உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் இளம் தலைவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- ஐம்பது நாடுகளைச் சேர்ந்த சுமார் 116 தலைவர்களைக் கொண்ட 2025 ஆம் ஆண்டு பட்டியலில் இடம் பெற்ற ஏழு இந்தியர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- OYO நிறுவனத்தின் ரித்தேஷ் அகர்வால், அலோக் மெடிகேபுரா அனில், நடராஜன் சங்கர், நிபுன் மல்ஹோத்ரா மற்றும் அனுராக் மாலூ ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★